உ

கடவுள் துணை.

தெய்வீகம் விளங்கிய
குகைநமசிவாயதேவர் அருளிச்செய்த

அருணகிரியந்தாதி.

இஃது
சிதம்பரம் புக்ஷாப்
வே. சுந்தரம்பிள்ளை அவர்கள்
விருப்பத்தின்படி,

சென்னைப்புரசை
நாராயணசாமிப்பிள்ளை
அவர்களது
நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1907. [அணா 1.

16, சரவணப்பெருமாள்முதலிவீதி, புரசை, சென்னை.

கடவுள் துணை.

குகைநமசிவாயதேவர்

சரித்திர வரலாறு.

மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவத்தலயாத்திரைசெய்து வருகிறேனென்று தமது குருவின் அனுமதிபெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தமதுகுருவாயெழுந்தருளிய அண்ணாமலையார்சொற்படி திருவண்ணாமலையிலே குகையினிடத்து மகிமையுடனிருந்தகன்னடமூர்த்தியாகிய குகைநமசிவாயதேவர் அவ்வண்ணாமலையார் வரப்பிரசாதத்தினாலே அவரை இவ்வருணகிரியந்தாதியாற் றோத்திரஞ் செய்துக்கொண்டிருந்து பலபரிபாகம்பெற்ற குகைநமசிவாயதேவர் முதலிய சிஷ்யவர்க்கங்களுக்கு தனதனுபவ ஞானமாகிய சிவஞானத்தை நன்குபதேசித்து இனிது விளங்கிக்கொண்டிருந்தனர்.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்.

குகைநமசிவாயதேவர் அருளிச்செய்த

அருணகிரியந்தாதி

காப்பு.

விநாயகர் துதி.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்குங்-கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால். (க)

நூல்.

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணாப்பெருமை
யார்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்-சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வையா நீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால். (க)

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே-மேலாய
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரி
தேசிகனே நீகண்டாய் திக்கு. (உ)

நீக்குவே றில்லை திருவுளமே யல்லாம
விக்குவே லைக்காய்ந்த வீசனே-மிக்கவிடங்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு. (௩)

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா-மாசிலா
வண்ணா மலையானே யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணாம லையாகண் பார். (௪)

பாராம லீயிருந்தாற் பார்மீதி னாயேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே-தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனை சூழ்ந்த
இறப்பை யகற்றுதற்கு மின்று. (௫)

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்று தமியேனை நெருக்காம-லன்றிதரு
மாரணனே சோணகிரி யத்தனே மாறேடுங்
காரணனே நீநினைந்தக் கால். (௬)

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
யால முகந்த வருணேசன்-கோலத்தை
நேசமுற்று நீகருதி நீங்காம லின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். (௭)

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்-வரங்கேட்ட
வென்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேனொன்கைம் மாறு. (௮)

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா-வாறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து. (௯)

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்தீக் கண்ணு
மரிந்தசிர மாலை யழகுந்-தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்கு மருணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து. (க0)

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிடுங் காணாத
கோலங் குருவடிவு கொண்டேதா-னாலந்
தரித்தபிரான் சோணேசன் றன்முனிந்து வேளை
யெரித்தபிரான் வந்தா னிதென். (கக)

எனது தவப்பயனோ வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணாத முக்கண்ணா-நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரி தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன். (கஉ)

பெறறேறும் பலனைப் பிறந்ததனா னெஞ்சமே
பற்றேறு மனத்தி லனவரதம்-பற்றுவா
ருள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக் கொண்டாட வரம். (கங)

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திறம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு-முரம்பலிக்குஞ்
சோணா சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து. (கச)

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
யிருத்தி நினைப்பாரை யென்றும்-வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு. (கரு)

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரு
மென்புருக்கொள் பெண்ணா யிருக்குமே-யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். (கசு)

பரமனருணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோ-மருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
யாட்டுத் தலையாகை யால். (கஎ)

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சால வெருண்டோடுஞ் சமயத்தி-லோலமென
நின்றா னுலகறிய நேசமடி யாரிடத்துக்
குன்றாத சோணகிரிக் கோ. (கஅ)

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண
னோடி வடவா லுறங்குமே-நாடுங்கா
லக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றேற நகும். (ககூ)

நகுமானை யேந்தருணை நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா-தகுமேனை
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி லுமையனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது. (உ0)

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணாசலனை
யோதக் கடனெஞ்சே யோதினாற்-பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங் கரையேற லாம். (உக)

ஆமென்று நம்பி யனுதினம் போற்றினு
ஞுமென்று பற்றி நலமாகக்-காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை. (உஉ)

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமல்-துய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தன் வாரிதியிற்-கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய். (உங)

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்-காயப்பார்த்
தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட. (உ௪)

நடக்குங் குலங்கல்வி நம்மவெம்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார்-தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம். (உ௫)

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராகினு நன்றே-வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக் காளாவார்
பெரியவர்க்கு மேலான பேர். (உ௬)

பேறும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன்-சீரை
யுறக்கத் திலுமறக்க வொண்ணா துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின். (உ௭)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே-நின்னருளைக்
கொண்டுரையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றன் கருத்து. (உ௮)

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தில்வருஞ் சோணகிரி யீசா-பருத்த
வலங்கார நால்வேத னைந்தலையு மொன்றைக்
கலங்காம லீயறுத்தாய் கண்டு. (உ௯)

கண்டுமிணை யென்பார் கருத்துநா வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே-விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாற்றுமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம். (௩௰)

சிரமாலை தானணிந்து சேவி லுகந்தேறி
யருமா மறைதேடு மண்ணல்-வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வ னருணேச
னினிக்கூட்டான் றன்பத் தெமை. (௩௧)

எமையாளுஞ் சோணகிரி யீசாநின் பாக
துமையாளு நீயு முகந்த-சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
யிருக்குங் கருணைசெய்வா யென்று. (௩௨)

என்று மருணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்-சென்று
திரிந்தேன் பலமருந்து தின்று சிலகால
மிருந்தே னிராமலிருந் தேன். (௩௩)

ஏன மனந்தேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தானுவா-ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு. (௩௪)

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு பெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா-னொருமான்
பழுவேற்குஞ் சோணகிரி மன்ன னடியாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர். (௩௫)

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ-வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு. (௩௬)

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே-யெப்பொழுதும்
பெண்ணைவிட்டு நீங்காநின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண். (௩௭)

காணு ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணுமற் ருன்காண நாடியே-சேணுட
ராயும் புகழருணை யண்ணு மலையானை
மாயுந் தமியேன் மனம். (௩௮)

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா-னனத்தனரு
டக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு. (௩௯)

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த வுண்மையை-நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று. (௪0)

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெறுவ தெந்தநா
ளின்று தமியேற் கியம்பிடாய்-நன்றிதரு
மேகனே சோணகிரி நாதனே சேவேறும்
வாகனே சாகா வரம். (௪௧)

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்ற ளுடியே-யேகாந்த
கண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்தை
யெண்ணு மறவா தெடுத்து. (௪௨)

எடுத்த பயனை யிருவினையை யெண்ணு
றடுத்த சிவபூசை யறியார்-தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி நித்த ரடியாரை
யறியாத மானிடவ ரச்சு. (௪௩)

அச்செல்லா மொன்ற மதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே-இச்செகத்தில்
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான். (௪௪)

தானே யுலகுடையோன் றன்னைசவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதையாய்-தானே
யனைத்துயிருங் காக்கு மருணைச னென்றுன்
மனத்துயரம் போவதே மாண்டு. (சரு)

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டிடு-லீண்டுலகில்
வீணைசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணைச னென்றொருக்காற் சொல். (சசா)

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா-வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதனடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ. (சஎ)

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்-றுயகமா
மண்ணு மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணு மலையகற்று மபோது. (சஅ)

போது மதிசூடும் புனிதர் புவியின்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர்-பாத
மிறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று. (சகூ)

கூற்றிருக்கு முனைகாலிற் கூறு புறங்காலி
லேற்றிருக்குமாயவன்க ணெப்பொழுதுங்- ாற்றுகையி
லம்புயத்தோன் கரமிருக்கு மண்ணு மலைநாதர்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு. (ருo)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனே நன்னூ லறிந்தாலு-மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளாற் பயனேது
கண்டதெல்லாம் வீணிலே கற்று. (ருக)

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ-யுற்றகட
னெஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. (௫௨)

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்-செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிமட நெஞ்சமே யுன். (௫௩)

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு-முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து. (௫௪)

உயர்ந்தவர்க்கு மெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா-பயந்தமரா
ருண்ணப் படாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென். (௫௫)

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமிடா ரின்சொல் லறிகிலார்-முன்னமே
பொன்னூர் புரமெரித்த வுண்ணா முலைபாகா
வென்னார் திருநீ றிடார். (௫௬)

நீறிடே னைந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொளவதனுக்-காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனார் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றோ பரம். (௫௭)

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்பா யெண்ணாத பாவ-நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
விறப்பிற்கு மீடாயி னேன். (௫௮)

ஏனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைத்
தானொறுப்பாய் சோணகிரித் தாணுவா-மானுகந்த
வெந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல். (௫௯)

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும்-விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோநம் பேராசை தான். (௬0)

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தாதையாய்த்-தானென்னைச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
யப்பனே நீயேறு மாம். (௬௧)

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றாடுகிலென்
றானம் பதினாறுந் தான்செயினென்-ஞானங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணறனை யெண்ணாத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று. (௬௨)

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய்-வென்றிதரு
மம்மான் காத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல். (௬௩)

சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாத
மம்மால் விரிஞ்ச னறிகிலார்-நம்பா
விருந்தகதை சொன்னக்கா லென்னாகு நெஞ்சே
பொருந்த நினையாத போது. (௬௪)

போதையிரு பலனுக்குத்தப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்-றாதை
விருப்பா மதிசூடி வெண்டலையோ டோதி
யிருப்பா னருணேச னின்று. (௬௫)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயா
மென்றைக்குப் போமருணை யீசனே-கொன்றைமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியா
யென்னை நெருக்கு மிவை. (கசு)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும் பலபிணிநோ யெல்லா-முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்களுத்திற்
கொண்டே னெனக்கென் குறை. (கஎ)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்று-மறைபுகுந்தேம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல். (கஅ)

வேலைவிடமுண்ட விமலாருணேசர் கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை-மேலமரர்
பண்ணினார் பூசையறம் பண்ணிப் பரகதியி
னண்ணினா ரெல்லா நலம். (கசு)

எல்லார் பிறப்பு மிறப்புமிபற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிகதோஞ் சோணேச நில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம். (எ0)

ஏமாந்த் சோணகிரி மீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றுதார்-தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார். (எக)

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே-நெஞ்சநிய
வாண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கணைத்த மண். (எஉ)

மண்ணிற் பிறந்திருந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே-விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு. (௭௩)

தருவா யெனக்குந்தன் றன்னிரு தாடன்னை
மருவார் புரமெரித்த மன்னா-குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து. (௭௪)

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்-விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரி
புண்ணியனே நீகாணிப் போது. (௭௫)

இப்போது பின்னைக் கிலையென் றிப்போதை
யெப்போதுந் தள்ளா திரங்கியே-முப்போதும்
பூசிப்ப தென்னாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தென்னா ணினைந்து. (௭௬)

நினையேன் றிருக்கோல நின்றுகண் ணீர்சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன்-புனையே னின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர். (௭௭)

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்-வாராது
தீது நலமுந் தெரியுங்கா ணெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு. (௭௮)

இருந்து நினைப்பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யின்மையிலே போக்கு-மருந்தன்றோ
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தானு மருணகிரி
யெம்பிரா னோரஞ் செழுந்து. (௭௯)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றுஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே-யஞ்சுதலைக்
கொன்றறுத்து நாளை யொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று. (௮௦)

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனார்க்-கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான். (௮௧)

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை வாழ்த்துநர்க்குப்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு-முத்திதரும்
மாற்றறிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றறிய நெஞ்சமே பூண்டு. (௮௨)

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்-தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னருணைச்
சங்கரா கங்கா தரா. (௮௩)

கங்கா தரனே கடையேனை யெந்நா
ளங்கா தரவா வழைக்குநா-ளங்காதல்
பார்க்குநாள் சோணேசா பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்நாள் செப்பு. (௮௪)

செப்பரிய வாணவத்தைச் செகுமுரு மும்மலத்தை
யொப்பிலொரு சஞ்சிதத்தை யோட்டினை-யிப்போ
தருவாயி னின்ற வருணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு. (௮௫)

கொண்டநெறி கற்றுங் குலையா மனத்திருக்கு
மண்டர்க்கா வேயருணை யண்ணலே-தொண்டர்க்
கிடையாத நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல். (௮௬)

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி னாடேன்யான்-சொல்லரிய
வண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணாவிடத்
துண்ணா முலையாளை யும். (அஎ)

உண்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா-லிம்மையிலே
யெல்லாருங் காணா வெளிதோ புவிமீதி
னல்லார் துதிக்கு நடம். (அஅ)

நடலைய றுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
ருடலையொ றுத் தாலாவ துண்டோ-வடநூ
லோதினாற் பாச மொழியுமோ புற்றிலே
மோதினாற் பாம்புசா மோ. (அகூ)

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தில்
தாகமுறுநின்பெருமை தானறியேன்-காகநாய்
தம்மதென்னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியி
னம்மதென்னுங் கண்டாய் நரி. (கூ௰)

கரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தே
னரிக்குப் மரிதா மனே-தெரிக்குமறை
காணாத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணாத நாயேன் பிறந்து. (கூக)

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடே
னறந்தழைக்குஞ் சோணகிரி யாரே-பிறந்திறவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் றான். (கூஉ)

தானவர்கண் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே-யேனம்
விருப்பா மலர்சூடி வேண்டினா னீண்ட
கருப்பா லிருந்தென்ன நீர். (கூங)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே-பாராளுந்
தந்தையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின். (௬௪)

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
பின்னாந் தருமருணை யையரே-யென்னை
யெடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெதி. (௬௫)

நீர்கொண்ட வேணி நிமலாவென் னீள்பிறப்பை
யார்தொலைப்பார் நீயல்லா தாயுங்காற்-பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
யையா கருணா லயா. (௬௬)

கருணா லயாநின் கழல்பணிய மாட்டே
னருணா சலாவென் றழையேன்-மாணாந்த
காலத்தி லோதுங் கருத்தறியேன் கண்ணையுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து. (௬௭)

குறியே யிருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னறிந்தவர்க்கொன் றுற்றேன்-சிறியேனின்
றூயமறை தேடரிய வண்ணா மலையானே
மாயுமிருந் தையா மனம். (௬௮)

ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்பமோ-வெய்யவினை
யென்னிச்சை யோவருணை யீசா படைத்தளிக்கு
முன்னிச்சை யன்றோ வரை. (௬௯)

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர் வாடாமற்
றரைக்குளா னந்தவெள்ளந் தன்னை-நிறைக்குமே
யெண்ணார் புரமெரித்த வெந்தை யருணகிரிக்
கண்ணா ரமுதமெனுங் கார். (க௦௦)

அருணகிரி யந்தாதி யழகுவெண் பாநூறும்
கருணையுடன் கற்றோரைக் கண்டங்-கருணையண்ணல்
வீறான பொன்னுலகின் வேந்தனுக்கு மாற்றால்
மாறாமல் வைப்பார் மகிழ்ந்து. (க௦க)

அருணகிரியந்தாதி முற்றிற்று.

ஸ்ரீ

விற்பனைக்குத் தயாராயுள்ள

வைணவ க்ரந்தங்கள்.

	ரூ.	அ.	ப.
நாலாயிர திவ்ய ப்ரபந்தம்	2	0	0
௸ வடகலை...	2	0	0
நித்தியானுஸந்தானம்	0	8	0
௸ வடகலை	0	6	0
திருப்பாவை வ்யாக்யானம்	1	4	0
திருப்பல்லாண்டு வ்யாக்யானம்...	1	4	0
யதீந்திரப்ரவண ப்ரபாவம்	1	0	0
விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் ...	1	0	0
பகவத்கீதா பாஷ்யார்த்த போதினி... ...	1	8	0
ஸ்ரீரங்கராஜஸ்தவம்	0	8	0
அஷ்டப்ரபந்தம்...	0	8	0
தேசிகப்ரபந்தம்	0	8	0
உபதேசரத்தினமாலை 9-ப்ரபந்தங்களடங்கிய	0	4	0
திருவாராதனக்கிரமம்	0	4	0
108-திருப்பதி ப்ரபாவம்	0	2	0
ஆண்டாள் திருப்பாவை	0	2	0
விஷ்ணு நாமாவளி...	0	1	0

பு. நாராயணசாமிப்பிள்ளை,

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலை,

16, சரவணப்பெருமாள் முதலிவீதி, புரசை, சென்னை.